# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)**
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**ஆணை எண்: 247/மா/2022**
**நாள் : 9.2.2023**

திரு. அ. சிலம்பரசன்,
கோவை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

1) துணை ஆணையாளர், (தெற்கு)
2) உதவி ஆணையாளர், (தெற்கு)
கோயம்புத்தூர் மாநகராட்சி. – எதிர்மனுதாரர்கள்

கோயம்புத்தூர் மாநகராட்சி, குனியமுத்தூர் அஞ்சல், இடையர்பாளையம், மதுரை வீரன் கோவில் வீதி, 43/பி என்கிற முகவரியில் வசிக்கும் திரு. அ. சிலம்பரசன் என்பவரின் 07.11.2022 நாளிட்ட மனு 09.11.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 247/மா/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கோயம்புத்தூர் மாநகராட்சி, குனியமுத்தூர் அஞ்சல், இடையர்பாளையம், மதுரை வீரன் கோவில் வீதி, 43/பி, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. அ. சிலம்பரசன் என்பவர் தனது முறையீட்டு மனுவில்,

1. "மனுதாரர் ஆகிய நான், மேற்கண்ட முகவரியில் குடும்பத்துடன் நிரந்தரமாக வசித்து வருகிறேன். மேலும் நான், தற்பொழுது, கோவையில் உள்ள, M/s. Honest Air Solution, Near Madukarai Market-ல் Supervisor ஆக பணிபுரிந்து வருகிறேன்.
2. கோவை மாவட்டம், பேரூர் வட்டம், குனியமுத்தூர் அஞ்சல், இடையர்பாளையம் கிராமம், புல எண்.76 ஆனது, இம் மனுவில் தொடர்புடைய சம்பவ இடம் & அரசுக்கு சொந்தமான வண்டிப்பாதை ஆகும்.
3. மேலும் என் தந்தைக்கு கடந்த 14.07.1997-ம் தேதியன்று, கிரையப் பத்திர எண்.2074/1997-ன்படி, கோவை மாவட்டம், தெற்கு வட்டம், குனியமுத்தூர் அஞ்சல், இடையர்பாளையம் கிராமம், புல எண்.98/3, விஸ்தீரணம் 969 சதுரடி சொந்தமானது ஆகும். அதே நாளன்று, ஒரு திரு. கி. நாராயணசாமி. த/பெ.கிட்டுசாமி அவர்களுக்கு, கிரையப் பத்திர எண்.2074/1997-ன்படி, மேற்படி புல எண்ணில், 987 சதுரடி சொந்தமானது ஆகும். மேற்படி இரண்டு சொத்துக்களும் உரிய புல எண்.76-ல் உள்ள

அரசுப் புறம்போக்கு வண்டிப்பாதை, மாமூல் வழிநடை ஆகும். மேலும், கடந்த 14.07.2017-ம் தேதியன்று, என் தந்தை காலமாகிவிட்டார்.

4. கடந்த 12.07.2004-ம் தேதியன்று, மேற்படி திரு. கி. நாராயணசாமி, த/பெ. கிட்டுசாமி அவர்களுக்கு, கிரையப் பத்திர எண்.1690/2004-ன்படி, மேற்படி புல எண்ணில், கூடுதலாக 240½ சதுர மீட்டர்-ஐ பதிவு செய்து கிரையம் வாங்கியுள்ளார். இதுவே, இம்மனுவில் தொடர்புடைய முதல் போலி / மோசடிப் பத்திரம் ஆகும். மேற்படி ஆவணத்தைக் கொண்டு, மேற்படி நபர் தொடர்ந்த அசல் வழக்கில், கடந்த 05.12.2006-ம் தேதியன்று, தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதில், மேற்படி நபரின் வழக்கு, விசாரணை முடிந்து, வாதங்கள் ஏற்றுக் கொள்ளப்படாமல், தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும், அதில், மேற்படி நபர், அரசுக்கு சொந்தமான வண்டிப்பாதைப் புறம்போக்கு புல எண்.76-ல், ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று நீதிமன்ற ஆணையர், தாக்கல் செய்த புலத்தணிக்கை வரைபட நகலின் அடிப்படையில், தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பில், மேற்படி நபரின் கிரையப் பத்திர எண்.1690/2004-ன்படி பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என தீர்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் அதில், எங்களுக்கு சொந்தமான, மேற்படி சொத்தின் அனுபவத்தில் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கி, தீர்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

5. கடந்த 17.10.2006 & 20.10.2012-ம் தேதியன்று, அ.வ.எண்.482/2007-ல், மேற்படி அரசுக்கு சொந்தமான வண்டிப்பாதைப் புறம்போக்கில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்றும், எங்களுக்கு ஆதரவாக, மேற்படி நபர், எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கியும், மேற்படி நபரின் கிரையப் பத்திர எண்.1690/2004-ன்படி பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும், மேற்படி எதிர்மனுதாரர் தரப்பு வாதங்கள் ஏற்றுக் கொள்ளப்படாமல், நிராகரிக்கப்பட்டு, தள்ளுபடி செய்யப்படுகிறது" என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

6. கடந்த 14.06.2016-ம் தேதியன்று, ASCFR No.12760/14 IA No.304/10, மாண்பமை முதன்மை சார்பு நீதிமன்றம், கோவை அவர்களிடத்தில், மேற்படி நபர் தாக்கல் செய்த முதலேற்பு வழக்கு, அதிகப்படியான காலதாமதத்துடன் தாக்கல் செய்யப்பட்டதால், தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

7. ஆனால் கடந்த 20.08.2018-ம் தேதியன்று, மேற்படி நபர், மேற்படி பரிகாரம் கிடைக்கத்தக்கத அல்ல என தீர்ப்பு வழங்கப்பட்ட கிரையப் பத்திர எண்.1690/2004-ஐ மூல ஆவணமாகக் கொண்டு, ஓர் பிழை திருத்தம் பத்திரம் எண்.4629/2018 பதிவு செய்துள்ளார். இதுவே இம்மனுவில் தொடர்புடைய 2-வது போலி / மோசடிப் பத்திரம் ஆகும். அதனைத் தொடர்ந்து, கடந்த 02.11.2018-ம் தேதியன்று, ஓர் தான செட்டில்மென்ட் பத்திரம் எண்.4628/2018-ஐ மேற்படி நபர் பதிவு செய்துள்ளார். இதுவே, இம்மனுவில் தொடர்புடைய 3-வது போலி/மோசடிப் பத்திரம் ஆகும்.

8. கடந்த 17.10.2018-ம் தேதியன்று, மேற்படி நபர், மேற்படி உண்மை விவரங்களை மறைத்து, மேற்படி பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என தீர்ப்பு வழங்கப்பட்ட, கிரையப் பத்திர எண்.1690/2004 & அதனைத் தொடர்ந்து பதிவு செய்யப்பட்ட மேற்படி பதிவு ஆவணங்களை மூல ஆவணமாகக் கொண்டு, மேற்படி எதிர்மனுதாரர்களின் உதவியுடன் கட்டிட வரைபட அங்கீகாரம் / அனுமதி பெற்றுள்ளார்.

1. "தமிழ் நாடு உள்ளாட்சிகள் அமைப்பு முறைமன்ற நடுவ சட்டம் 2014-ம் பிரிவு 10 (3) (c)-ன்படி, வரையறுக்கப்பட்ட 5 ஆண்டுகளுக்கு முன்னர், இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், இம்மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்,

இம்மனுவின் மனுதாரர் / தீர்ப்பு பெற்ற வகையறா, மாண்பமை சமூகம் அவர்களிடத்தில் மெத்தப் பணிந்து வேண்டிக் கேட்டுக் கொள்கிறார்.

9. கடந்த 12.09.2020-ம் தேதியன்று, மேற்படி நபர் மேற்படி உண்மை விவரங்களை மறைத்து மேற்படி பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என தீர்ப்பு வழங்கப்பட்ட கிரையப் பத்திர எண்.1690/2004-ஐ மூல ஆவணமாகக் கொண்டு, பட்டா மாறுதல் விண்ணப்பம் தாக்கல் செய்து புல எண்.98/3பி என உட்பிரிவு செய்து (குறிப்புரை – 2020 /0103 / 12 / 219970 & 2018 / 12 / 13 / 000031SD, 27.02.2020ன் படி) அசல் சொத்தின் உண்மை நிலையை அரசு அதிகாரிகளின் உதவியுடன் மாற்றி அமைத்து (Original Position of the Property in Patta Layout / Field Map) உட்பிரிவு செய்துள்ளார்.

10. மேலும், 25.09.2020-ம் தேதியன்று மேற்படி அரசுக்கு சொந்தமான வண்டிப்பாதையில் மேற்படி நபர் மீண்டும் அதே இடத்தில் கட்டிடங்கள் கட்டுவதற்கு உரிய கட்டுமானப் பொருட்களை வைத்து கட்டிட வேலைகள் ஆரம்பிக்கும்பொழுது அதைக் கேட்ட பொழுது எங்களை அருவருத்தக்க அசிங்கமான / தகாத வார்த்தைகளில் திட்டியும், கொலை மிரட்டல் விடுத்தது தொடர்பாக, கடந்த 14.12.2020-ம் தேதியன்று மாண்பமை நீதித் துறை நடுவர் மன்றம் எண்.7 கோவை அவர்களிடம் தனிப்புகார் தாக்கல் செய்யப்பட்டு மேற்படி நபரிடம் உரிய விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

11. மேற்கண்ட பொருள் தொடர்பாக கடந்த 29.08.2022-ம் தேதியன்று வருவாய் கோட்டாட்சியர், வடக்கு, கோவை அவர்கள் ஓர் உத்தரவு பிறப்பித்துள்ளார். அதில்,
    1. சர்வே எண்.98/3-க்கான புலவரைபடத்தில் உள்ள சர்வே எண்.98/3B–க்கான குறியீடு தவறாக உள்ளதால் மேற்கண்ட உட்பிரிவு சர்வே எண்.98/3B ஆனது ரத்து செய்யப்படுகிறது என்றும் நீதிமன்றத்தால் பரிகாரம் கிடைக்கத்தக்கல்ல என உத்தரவிடப்பட்டுள்ளதால், இணை சார் பதிவக ஆவண எண்கள் 1690/2004, 4628/2018, 4629/2018, 6150/2018-களின் அடிப்படையில், எந்தவொரு வருவாய்த்துறை மாற்றங்களும் செய்யக்கூடாது என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

12. கடந்த 10.10.2022-ம் தேதியன்று மாண்பமை துணைப் பதிவுத்துறை தலைவர், கோவை அவர்களின் உத்தரவில் "அரசுப் புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து, மோசடி செய்து ஆவண எண்கள்.1690/2004, 4628/2018, 4629/2018, 6150/2018-ஐ பதிவு செய்துள்ளதால் பிரிவு 83-ன் கீழ் குற்ற நடவடிக்கை தொடரவும் வில்லங்கத்தில் குறிப்பு சேர்க்கவும்" உத்தரவிடப்பட்டுள்ளது.

13. மேற்கண்ட வாதங்களின் அடிப்படையில், நீதிமன்றத்தால் பரிகாரம் கிடைக்கத்தக்கல்ல என நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்ட அதே ஆவணங்களின் அடிப்படையில் எந்தவொரு வருவாய்த் துறை மாற்றங்களும் செய்யக்கூடாது என உத்தரவிடப்பட்ட தமிழ்நாடு பதிவு சட்டம் 1908-ன் பிரிவு 83-ன் கீழ் குற்ற நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்ட பொய்யான / போலியான / மோசடியான, 02-இணை சார் பதிவக ஆவண எண்கள்.1690/2004, 4628/2018, 4629/2018, 6150/2018-களின் அடிப்படையில் மேற்படி எதிர்மனுதாரர்கள் வீட்டு வரி விதிப்பது குடிநீர் இணைப்பு வழங்குவது, கட்டிட வரைபட அங்கீகாரம் வழங்குவது போன்ற செயல்களை செய்துள்ளது ஏற்புடையது அல்ல.

14. மேற்படி எதிர்மனுதாரர்களின் மேற்படி செயலானது, அரசுக்கு சொந்தமான வண்டிப்பாதை புறம்போக்கில் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை ஊக்கப்படுத்தி, நீதிமன்ற

அவதிப்பு செய்து, கடமையில் இருந்து தவறி, அதிகார துஷ்பிரயோகம் செய்து, மாநகராட்சி சட்ட திட்டங்களுக்கு முரணாக, மேற்படி எதிர்மனுதாரர்களால், வீட்டு வரி விதிப்பு, குடிநீர் இணைப்பு, கட்டிட வரைபட அங்கீகாரம் / அனுமதி வழங்கியுள்ளார்கள்.

15. மேற்படி எதிர்மனுதாரர்கள், எதன் அடிப்படையில், நீதிமன்றத்தால் பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்ட அதே ஆவணங்களின் அடிப்படையில், மேற்படி வீட்டு வரி விதிப்பு, குடிநீர் இணைப்பு, கட்டிட வரைபட அங்கீகாரம் / அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதை விசாரணை செய்ய வேண்டுகிறேன்.

16. இம்மனுவின் மீது கீழ்க்கண்ட தீர்ப்புகளின் அடிப்படையில், இம்மனுவின் மீத உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் மாண்பமை சமூகம் அவர்களிடத்தில் மெத்தப் பணிந்து வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.
    1. "மாநகராட்சி சாலையை ஆக்கிரமித்து கட்டப்பட்ட கடைக்குரிய உரிமத்தை ரத்து செய்து, ஆக்கிரமிப்பை அகுற்ற, விரைவான நடவடிக்கைக்கு உத்தரவு" ஆணை எண்.003/2021/மா, நாள்:03.03.2021.
    2. "பேரூராட்சியின் பொதுச்சாலையை ஆக்கிரமித்து, கட்டப்பட்டுள்ள கட்டிடம் குறித்து, புலத்தணிக்கை செய்து, அகற்றிட தகுந்த நடவடிக்கை எடுக்க உத்தரவு" ஆணை எண்.002/பே/2021, நாள்:03.03.2021.

17. மேற்படி தீர்ப்புகளின் அடிப்படையில், மேற்படி புகார் மனுவின் சொத்துக்கள் குறித்து மேற்படி எதிர்மனுதாரர்கள் புலத்தணிக்கை செய்து அதன் வரைபடம் மற்றும் அறிக்கையின்படி, உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டுமாய் மாண்பமை சமூகம் அவர்களை பணிவுடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

18. இம்மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுக்க தங்களுக்கு தகுந்த அதிகாரம் இல்லை எனில், எந்த அதிகாரிக்கு, அவ்வாறான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதோ அந்த அரசு அதிகாரிக்கு இம்மனுவினை மாற்றி அனுப்பி, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் மாண்பமை சமூகம் அவர்களை பணிவுடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

19. இம்மனுவின் மீது உரிய சட்டப் பூர்வ நடவடிக்கை எடுக்க தவறும்பட்சத்தில், மேற்படி பொருள் / சொத்து தொடர்புடைய வழக்கில் தங்களையும் ஒரு தரப்பினராக இணைத்து, நீதி பெற வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்படுவதாக, நான் உணர்கிறேன் என்பதை மாண்பமை சமூகம் அவர்களிடத்தில் மெத்தப் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

20. இம்மனுவின் மீது பிறப்பிக்கப்படும் உத்தரவில் பாதிக்கப்பட்ட தரப்பினர்கள், எத்தனை நாட்களுக்குள் எந்த அரசு அதிகாரியிடம் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்ய வேண்டும் என்பதை தெரியப்படுத்துமாறு மாண்பமை சமூகம் அவர்களிடத்தில், மைத்தப் பணிந்து வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

21. இம்மனுவினை ஏற்க மறுத்தால், எனக்கும் என் குடும்பத்தாருக்கும், தாங்க முடியாத மன உளைச்சல், பண விரையம் & கால விரையம் ஏற்பட்டுவிடும் என்பதை மாண்பமை சமூகம் அவர்களிடத்தில், மெத்தப் பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே மாண்பமை சமூகம் அவர்கள் இம்மனுவினை கருணையுடன் பரிசீலனை செய்து, ஏற்று நீதிமன்ற உத்தரவை அமுல்படுத்தி பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என மாண்பமை நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்ட எந்தவொரு வருவாய்த்துறை மாற்றங்களும் செய்யக்கூடாது என வருவாய்த்துறையால் உத்தரவிடப்பட்ட தமிழ்நாடு பதிவு சட்டம் 1908-ன் பிரிவு 83-ன் கீழ் குற்ற நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்ட பொய்யான / போலியான / மோசடியான, 02-ம்

இணை சார் பதிவக ஆவண எண்கள்.1690/2004, 4628/2018, 4629/2018, 6150/2018-களின் அடிப்படையில்,

1. கடந்த 17.10.2018-ம் தேதியன்று மேற்படி எதிர்மனுதாரர்களால் வழங்கப்பட்ட கட்டிட அனுமதி / அங்கீகாரத்தை ரத்து செய்ய / ரத்து செய்வதற்குரிய பரிந்துரை செய்ய, உத்தரவிடக் கோரியும்.
2. மேற்படி தாவா சொத்தில் விதிக்கப்பட்ட வீட்டுவரி விதிப்பு & குடிநீர் இணைப்பை ரத்து செய்ய / ரத்து செய்வதற்குரிய பரிந்துரை செய்ய, உத்தரவிடக் கோரியும்
3. மேற்படி சட்ட விரோத செயல்களில் தொடர்புடைய மேற்படி எதிர்மனுதாரர்கள் மீது உரிய சட்ட மற்றும் துறை ரீதியான நடவடிக்கை எடுக்க உத்தரவிடக் கோரியும்
4. எதிர்வரும் காலங்களில், இதுபோன்ற செயல்கள் நடைபெறா வண்ணம், தக்கதென கருதும் இன்னபிற உத்தரவுகள் பிறப்பிக்க கோருகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது. அவர் தனது 04.01.2023 நாளிட்ட அறிக்கையில்:-**

மனுதாரர் திரு. சிலம்பரசன் என்பவரது மனுவில் குனியமுத்தூர் கிராமம், க.ச.எண்.98/3-ல் திரு. நாராயணசாமி என்பவர் போலி ஆவணங்களின் மூலம் இடத்தை கிரையம் செய்து, வண்டிப்பாதை இடத்தை ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடத்திற்கு வழங்கப்பட்டுள்ள கட்டிட அனுமதி, சொத்து வரி, குடிநீர் இணைப்பு ஆகியவற்றை ரத்து செய்யுமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள குனியமுத்தூர் கிராமம் 2011-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லை விரிவாக்கத்தின் போது மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதியாகும்.

மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள இடம் வருவாய் துறைக்கு சொந்தமான வண்டிப்பாதை புறம்போக்கு இடமாகும். மேலும், குனியமுத்தூர் கிராம நில அளவை ஆவணங்கள் நாளது வரையிலும் பேரூர் வட்ட அலுவலகத்திற்கு உட்பட்ட ஆவணங்களில் மட்டுமே பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. மேற்படி இடம் நகர அளவைக்கு ஏதும் எடுத்துக் கொள்ளப்படாததாலும், நகர அளவை ஆவணங்கள் வட்டாட்சியர் அலுவலகத்தில் பராமரிக்கப்படுவதாலும், மாநகராட்சியால் தன்னிச்சையாக நடவடிக்கை மேற்கொள்ள வழிவகை இல்லை என்ற விபரம் மனுதாரருக்கு ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் மனுதாரர் நாளது வரையிலும் தொடர்ந்து தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மனு செய்வதை வழக்கமாக கொண்டுள்ளார்.

மனுவில் மேற்காண் ஆக்கிரமிப்பு தொடர்பான நீதிமன்ற தீர்ப்பின் மீது (அதாவது தனிப்பட்ட இரு நபர்களுக்கு இடைப்பட்ட வழக்கு மீதான நீதிமன்ற தீர்ப்பின் மீது) நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளார். மேற்காண் நீதிமன்ற தீர்ப்பு நகலில் மாநகராட்சிக்கு எவ்வித உத்திரவும் பிறப்பிக்கப்படாததால் நடவடிக்கை மேற்கொள்ள இயலாது என தெரிவிக்கப்பட்டது.

மேலும் குனியமுத்தூர் கிராமம், க.ச. எண்.98/3, வண்டிப்பாதை புறம்போக்கில் உள்ள ஆக்கிரமிப்பு அகற்றக் கோரியது தொடர்பாக மாநில தகவல் ஆணையர் அவர்களுக்கு மனுதாரரால் முறையீடு செய்யப்பட்ட வேறுபட்ட மூன்று வழக்குகளில் (வழக்கு எண்.SA6028/A/2021, SA1527/A/2021 மற்றும்

SA16520/A/2021 ஆகியவற்றில்) வழக்கு எண்.SA6028/A/2021 மீது பெறப்பட்ட உத்திரவில் கீழ்கண்டவாறு:-

"வருவாய் துறை கட்டுப்பாட்டில் உள்ள நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ள நபர்களை சம்பந்தப்பட்ட துறைகளே அகற்ற வேண்டியிருப்பதால் மாநகராட்சியின் பணியாக கருத முடியாது என்பதையும் ஆணையம் பதிவுசெய்து மனுதாரரது மேல்முறையீட்டு மனுவின் மீது மேல்நடவடிக்கை தேவையில்லை என ஆணையம் கருதி வழக்கை முற்றாக்கப்படுகிறது." என உத்திரவு பெறப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ 18.01.2023 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் 01.02.2023 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைக்கப்பட்டனர்.**

மனுதாரர் 1.2.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை எழுத்து பூர்வமாக சமர்ப்பித்துள்ளார்.

1. "மனுதாரர் / தீர்ப்பு பெற்ற வகையறா ஆகிய நான் கோவை மாவட்டம், இடையர்பாளையம், 43/பி, மதுரை வீரன் கோவில், குனியமுத்தூர் அவர்கள் குடும்பத்துடன் நிரந்தரமாக வசித்து வருகிறேன். மாண்பமை சமூகம் அவர்கள், கடந்த 18.01.2023ம் தேதியிட்டு அனுப்பிய அழைப்பாணையைப் பெற்றுக் கொண்டு, மாண்பமை சமூகம் அவர்கள் முன்பு முன்னிலையாகி, பணிந்து சமர்ப்பிக்கும் எழுத்துவடிவிலான வாக்குமூலம் இதுவாகும்.
2. கோவை மாவட்டம், பேரூர் வட்டம், குனியமுத்தூர் அஞ்சல், இடையர்பாளையம் கிராமம், புல எண்.76 ஆனது இம்மனுவில் தொடர்புடைய சம்பவ இடம் மற்றும் அரசுக்கு சொந்தமான வண்டிப்பாதை ஆகும்.
3. மேலும் என் தந்தைக்கு கடந்த 14.07.1997-ம் தேதியன்று, கிரையப் பத்திர எண்.2074/1997-ன்படி, கோவை மாவட்டம், தெற்கு வட்டம், குனியமுத்தூர் அஞ்சல், இடையர்பாளையம் கிராமம், புல எண்.98/3, விஸ்தீரணம் 969 சதுரடி சொந்தமானது ஆகும். அதே நாளன்று, ஒரு திரு. கி. நாராயணசாமி. த/பெ.கிட்டுசாமி அவர்களுக்கு, கிரையப் பத்திர எண்.2074/1997-ன்படி மேற்படி புல எண்ணில், 987 சதுரடி சொந்தமானது ஆகும். மேற்படி இரண்டு சொத்துக்களும் உரிய புல எண்.76-ல் உள்ள அரசுப் புறம்போக்கு வண்டிப்பாதை மாமூல் வழிநடை ஆகும். மேலும், கடந்த 14.07.2017-ம் தேதியன்று, என் தந்தை காலமாகிவிட்டார்.
4. கடந்த 12.07.2004-ம் தேதியன்று, மேற்படி திரு. கி. நாராயணசாமி, த/பெ. கிட்டுசாமி அவர்களுக்கு, கிரையப் பத்திர எண்.1690/2004-ன்படி மேற்படி புல எண்ணில் கூடுதலாக 240½ சதுர மீட்டர்-ஐ பதிவு செய்து கிரையம் வாங்கியுள்ளார். இதுவே இம்மனுவில் தொடர்புடைய முதல் போலி / மோசடிப் பத்திரம் ஆகும். மேற்படி ஆவணத்தைக் கொண்டு மேற்படி நபர் தொடர்ந்த அசல் வழக்கில் கடந்த 05.12.2006-ம் தேதியன்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதில், மேற்படி நபரின் வழக்கு விசாரணை முடிந்து வாதங்கள் ஏற்றுக் கொள்ளப்படாமல், தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும், அதில் மேற்படி நபர், அரசுக்கு சொந்தமான வண்டிப்பாதைப் புறம்போக்கு புல எண்.76-ல் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த புலத்தணிக்கை வரைபட நகலின் அடிப்படையில், தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பில் மேற்படி நபரின் கிரையப் பத்திர எண்.1690/2004-ன்படி பரிகாரம் கிடைக்கத்தக்கல்ல என தீர்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் அதில் எங்களுக்கு சொந்தமான மேற்படி சொத்தின்

அனுபவத்தில் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கி தீர்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

5. கடந்த 17.10.2006 மற்றும் 20.10.2012-ம் தேதியன்று அ.வ.எண்.482/2007-ல் மேற்படி நபர் மேற்படி அரசுக்கு சொந்தமான வண்டிப்பாதைப் புறம்போக்கு-ல் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்றும் எங்களுக்கு ஆதரவாக மேற்படி நபர், எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கியும், மேற்படி நபரின் கிரையப் பத்திர எண்.1690/2004-ன்படி பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும் மேற்படி எதிர்மனுதாரர் தரப்பு வாதங்கள் ஏற்றுக் கொள்ளப்படாமல், நிராகரிக்கப்பட்டு, தள்ளுபடி செய்யப்படுகிறது" என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

6. கடந்த 14.06.2016-ம் தேதியன்று, ASCFR No.12760/14 IA No.304/10, மாண்பமை முதன்மை சார்பு நீதிமன்றம் கோவை அவர்களிடத்தில் மேற்படி நபர், தாக்கல் செய்த முதலேற்பு வழக்கு அதிகப்படியான காலதாமதத்துடன் தாக்கல் செய்யப்பட்டதால், தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

7. ஆனால் கடந்த 20.08.2018-ம் தேதியன்று மேற்படி நபர் மேற்படி பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என தீர்ப்பு வழங்கப்பட்ட கிரையப் பத்திர எண்.1690/2004-ஐ மூல ஆவணமாகக் கொண்டு ஓர் பிழை திருத்தம் பத்திரம் எண்.4629/2018 பதிவு செய்துள்ளார். இதுவே இம்மனுவில் தொடர்புடைய் 2-வது போலி / மோசடிப் பத்திரம் ஆகும். அதனைத் தொடர்ந்து, கடந்த 02.11.2018-ம் தேதியன்று, ஓர் தான செட்டில்மென்ட் பத்திரம் எண்.4628/2018-ஐ மேற்படி நபர் பதிவு செய்துள்ளார். இதுவே இம்மனுவில் தொடர்புடைய 3-வது போலி/மோசடிப் பத்திரம் ஆகும்.

8. கடந்த 17.10.2018-ம் தேதியன்று, மேற்படி நபர் மேற்படி உண்மை விவரங்களை மறைத்து மேற்படி பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என தீர்ப்பு வழங்கப்பட்ட கிரையப் பத்திர எண்.1690/2004 மற்றும் அதனைத் தொடர்ந்து பதிவு செய்யப்பட்ட மேற்படி பதிவு ஆவணங்களை மூல ஆவணமாகக் கொண்டு, மேற்படி எதிர்மனுதாரர்களின் உதவியுடன் கட்டிட வரைபட அங்கீகாரம் /அனுமதி பெற்றுள்ளார்.

9. கடந்த 12.09.2020-ம் தேதியன்று மேற்படி நபர் மேற்படி உண்மை விவரங்களை மறைத்து மேற்படி பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என தீர்ப்பு வழங்கப்பட்ட, கிரையப் பத்திர எண்.1690/2004-ஐ மூல ஆவணமாகக் கொண்டு, பட்டா மாறுதல் விண்ணப்பம் தாக்கல் செய்து புல எண்.98/3பி என உட்பிரிவு செய்து, (குறிப்புரை – 2020 /0103 / 12 / 219970 & 2018 / 12 / 13 / 000031SD, 27.02.2020ன் படி) அசல் சொத்தின் உண்மை நிலையை, அரசு அதிகாரிகளின் உதவியுடன் மாற்றி அமைத்து (Original Position of the Property in Patta Layout / Field Map), உட்பிரிவு செய்துள்ளார்.

10. மேலும், 25.09.2020-ம் தேதியன்று மேற்படி அரசுக்கு சொந்தமான வண்டிப்பாதை-ல், மேற்படி நபர் மீண்டும் அதே இடத்தில் கட்டிடங்கள் கட்டுவதற்கு உரிய கட்டுமானப் பொருட்களை வைத்து, கட்டிட வேலைகள் ஆரம்பித்தது தொடர்பாக கடந்த 14.12.2020-ம் தேதியன்று மாண்பமை நீதித் துறை நடுவர் மன்றம் எண்.7, கோவை அவர்களிடம் தனிப்புகார் தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி நபரிடம், உரிய விசாரணை செய்து, நடவடிக்கை எடுக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

11. மேற்கண்ட பொருள் தொடர்பாக, கடந்த 29.08.2022-ம் தேதியன்று, திரு. வருவாய் கோட்டாட்சியர் வடக்கு, கோவை அவர்கள் ஓர் உத்தரவு பிறப்பித்துள்ளார். அதில்:-

1. சர்வே எண்.98/3-க்கான புலவரைபடத்தில் உள்ள சர்வே எண்.98/3B–க்கான குறியீடு தவறாக உள்ளதால் மேற்கண்ட உட்பிரிவு சர்வே எண்.98/3B ஆனது

ரத்து செய்யப்படுகிறது என்றும், நீதிமன்றத்தால் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என உத்தரவிடப்பட்டுள்ளதால் 02-ம் இணை சார் பதிவக ஆவண எண்கள் 1690/2004, 4628/2018, 4629/018, 6150/2018-களின் அடிப்படையில், எந்தவொரு வருவாய்த்துறை மாற்றங்களும் செய்யக்கூடாது என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

12. கடந்த 10.10.2022-ம் தேதியன்று மாண்பமை துணைப் பதிவுத்துறை தலைவர் கோவை அவர்களின் உத்தரவில், "அரசுப் புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து, மோசடி செய்து ஆவண எண்கள்.1690/2004, 4628/2018, 4629/2018, 6150/2018-ஐ பதிவு செய்துள்ளதால் பிரிவு 83-ன் கீழ் குற்ற நடவடிக்கை தொடரவும் வில்லங்கத்தில் குறிப்பு சேர்க்கவும்" உத்தரவிடப்பட்டுள்ளது.

13. மேற்கண்ட வாதங்களின் அடிப்படையில், நீதிமன்றத்தால் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்ட அதே ஆவணங்களின் அடிப்படையில் எந்தவொரு வருவாய்த் துறை மாற்றங்களும் செய்யக்கூடாது என உத்தரவிடப்பட்ட தமிழ்நாடு பதிவு சட்டம் 1908-ன் பிரிவு 83-ன் கீழ் குற்ற நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்ட பொய்யான / போலியான / மோசடியான 02-இணை சார் பதிவக ஆவண எண்கள்.1690/2004, 4628/2018, 4629/2018, 6150/2018-களின் அடிப்படையில் மேற்படி எதிர்மனுதாரர்கள் வீட்டு வரி விதிப்பது குடிநீர் இணைப்பு வழங்குவது கட்டிட வரைபட அங்கீகாரம் வழங்குவது போன்ற செயல்களை செய்துள்ளது ஏற்புடையது அல்ல என்றும்,

14. மேற்படி தீர்ப்புகளின் அடிப்படையில், மேற்படி புகார் மனுவின் சொத்துக்கள் குறித்து மேற்படி எதிர்மனுதாரர்கள் புலத்தணிக்கை செய்து அதன் வரைபடம் மற்றும் அறிக்கையின்படி, உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டுமாய் மாண்பமை சமூகம் அவர்களை, பணிவுடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

**01.02.2023 அன்றைய நேரடி விசாரணையில் கோயம்பத்தூர் மாநகராட்சியின் தெற்கு மண்டல உதவி ஆணையர், உதவி செயற் பொறியாளர் மற்றும் நகர சார் ஆய்வாளர் (சர்வே) ஆகியோர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்.**

"மனுதாரர் திரு சிலம்பரசன் என்பவர் கோயம்புத்தூர் மாவட்டம் குனியமுத்தூர் கிராமர் க.ச. எண் 98/3ல் திரு. நாராயணசாமி என்பவர் போலி ஆவணங்களின் மூலம் இடத்தை கிரையம் பெற்று வண்டிப்பாதை இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார் எனவும், மேற்கண்ட ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடத்திற்கு வழங்கப்பட்ட கட்டட அனுமதி சொத்து வரி குடிநீர் இணைப்பு ஆகியவற்றை ரத்து செய்யுமாறு கோரி மனு அளித்திருந்தார். மனுதாரர் தெரிவித்திருந்த இடம் மாநகராட்சி அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டது. அதில் மனுதாரரின் புகார் மனுவில் தெரிவித்துள்ள நாராயணசாமி என்பவர் அவருக்கு சொந்தமான பட்டா இடத்தில் (சர்வே எண் 98/3) கட்டப்பட்டுள்ள 396 சதுர அடி அளவுள்ள அவ்வீட்டிற்கு அரையாண்டிற்கான சொத்து வரியாக ரூபாய் 159/– வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. கோயம்பத்தூர் மாவட்டத்தில் உள்ள குனியமுத்தூர், பேரூராட்சியாக இருந்தபோதே மேற்கண்ட வீட்டிற்கு வரி விதிப்பு செய்யப்பட்டது என்கின்ற விவரத்தையும், கோயம்பத்தூர் மாநகராட்சியால் மேற்கண்ட வரி விதிப்பு செய்யப்படவில்லை என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் மனுதாரர் அளித்துள்ள புகார் மனுவையொட்டி, மேற்கண்ட திரு. நாராயணசாமி என்பவரின் வீட்டை மாநகராட்சி அலுவலர்களால் அளவீடு செய்யப்பட்டதில் அங்கு

அரசுக்கு சொந்தமான வண்டிப்பாதை புறம்போக்கு இடத்தின் ஒரு பகுதியை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. மேற்கண்ட ஆக்கிரமிப்பு இடம் தற்போது காலியாகத்தான் உள்ளது என்பதையும், திரு. நாராயணசாமி என்பவரால் பட்டா இடத்தில் கட்டப்பட்டுள்ள வீட்டிற்கு மட்டுமே வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஏற்கனவே, மேற்கண்ட நாராயணசாமி என்பவரின் வீட்டை அளந்து வரி விதித்து வந்த நிலையில், மனுதாரரின் வேண்டுகோளின்படி மீண்டும் மேற்கண்ட இடத்தை வருவாய் துறையினரால் ஆய்வு செய்து சுமார் 68 சதுர அடி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்ததாகவும், மேற்கண்ட ஆக்கிரமிப்பு 13.9.2021ல் அகற்றப்பட்டது எனவும் கோவை மாவட்ட தெற்கு வருவாய் கோட்டாட்சியர் தனது 25.4.2022 நாளிட்ட செயல்முறை ஆணையில் தெரிவித்துள்ளார்.

எனினும், மேற்கண்ட திரு. நாராயணசாமி என்பவருக்கு சொந்தமான கட்டடத்துடன் வண்டிப்பாதை இடம் எவ்வளவு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதை வருவாய்த்துறை அலுவலர்களுடன் சேர்ந்து மேற்கண்ட மனுதாரரின் முன்னிலையில் இடத்தை அளந்து, அங்குள்ள ஆக்கிரமிப்பை அகற்றி அதன் அறிக்கையை இம்முறை மன்றத்தில் இன்னும் 15 நாட்களில் சமர்ப்பிக்கிறோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

மேற்கண்ட நாராயணசாமி என்பவரின் வீட்டிற்கு விதிக்கப்பட்டு வரி விதிப்பின் நகலை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம். மேலும், கோயம்பத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டல உதவி ஆணையரின் 30.1.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்.

**முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சியின் தெற்கு மண்டல உதவி ஆணையர், உதவி செயற் பொறியாளர் மற்றும் நகர சார் ஆய்வாளர் (சர்வே) அவர்களின் வாக்குமுலம் மற்றும் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரிய வருகின்றன.**

கோவை மாவட்டம், குனியமுத்தூர் அஞ்சல், இடையர்பாளையத்தை சேர்ந்த திரு. கி. சிலம்பரசன், தன்னுடைய சொந்த இடத்திற்கும், திரு.கி. நாராயணசாமியின் இடத்திற்கும் உள்ள பொதுவான வண்டிபாதை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு அங்கு கட்டப்பட்டுள்ள கட்டடதாரருக்கு முறையற்ற அனுமதியும் குடிநீர் இணைப்பும் வழங்கிய கோயம்புத்தூர் மாநகராட்சியின் அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும், கோயம்புத்தூர் மாநகராட்சியால் வழங்கப்பட்ட அனுமதியை ரத்து செய்யுமாறும் மற்றும் குடிநீர் இணைப்பை துண்டிக்கவும் கோரியுள்ளார்.

2. மனுதாரர் தனது மனுவிலும் வாக்குமூலத்திலும் தெரிவித்தவாறு திரு. கி நாராயணசாமி, புல எண்.76ல் உள்ள இடத்தை ஆக்கிரமித்து உள்ளார் என்பது இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் 5.12.2000 நாளிட்ட தீர்ப்பின் வாயிலாக அறிய முடிகிறது. ஆனால் திரு. நாராயணசாமி புல எண்.98/3ல் உள்ள இடத்தில் 396 ச.அடியில் கட்டடம் கட்டப்பட்டுள்ளதாகவும், அந்த இடத்திற்கு அரையாண்டிற்கான சொத்து வரியாக ரூ.159/-வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதும், மேலும் அன்னாரின் வீட்டை மாநகராட்சி அலுவலர்கள் அளவீடு செய்யப்பட்டதில் அங்கு அரசுக்கு சொந்தமான வண்டிப்பாதை புறம்போக்கு இடத்தினை ஒரு பகுதியை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, இருந்ததும் தற்போது

அந்த இடம் காலியாக உள்ளது என்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டல உதவி ஆணையர், உதவி செயற் பொறியாளர், நகர சார் ஆய்வாளர் ஆகியோர் தங்களது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர். மேலும், கோவை மண்டலம் இணைப் பதிவுத் துறைத் தலைவர் தன்னுடைய 10.10.2022 நாளிட்ட செயல்முறையில் வழக்கிடை சொத்தான 240½ சதுர அடி முழுவதையும் எதிர் மனுதாரர் (திரு. நாராயணசாமி மற்றும் இருவர்) ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்பதற்கான ஆவண ஆதாரங்கள் ஏதும் மேல் முறையீட்டுதாரரால் (திரு. அ. சிலம்பரசன்) முழுமையாக தாக்கல் செய்யப்படவில்லை எனவும், தாவா சொத்தின் பொது பாதை ஆக்கிரமிப்பு எவ்வளவு வீஸ்தீரணம் உள்ளது என்பதை வருவாய் துறையினர் நில அளவை செய்து உறுதி செய்தால் மட்டுமே அறிய இயலும் என்றும், இறுதியாக வழக்கிடை சொத்தில் ஒரு பகுதி அரசு புறம்போக்கு நிலம் ஆக்கிரமிப்பு உள்ளது என்பதை மாண்பமை நீதிமன்றங்களின் தீர்ப்பு மற்றும் வருவாய் துறையினரின் அறிக்கையின் மூலம் அறியமுடிகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

**இந்நிகழ்வு தொடர்பாக இம்முறைமன்றம் விரிவான விசாரணைக்குப்பின் பின்வருமாறு ஆணையிடுகிறது:–**

2014 ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் நடுவச் சட்டத்தில், இம்முறைமன்றத்திற்கு உரிமையியல் நீதிமன்ற அந்தஸ்து வழங்கியுள்ள நிலையில், மனுதாரர் தன் மனு மீது இம்முறைமன்றம் உரிய நடவடிக்கை எடுக்கும் தவறும்பட்சத்தில் இம்முறைமன்றத்தை ஒரு தரப்பினராக இணைத்து நீதிபெற நீதிமன்றத்தை நாடும் கட்டாயத்திற்கு தள்ளப்படுவதாக இம்முறைமன்றத்தை அச்சுறுத்தும் வகையில் குறிப்பிட்டுள்ளது மிகவும் வன்மையாக கண்டிக்கத்தக்கது ஆகும்.

மனுதாரர் பல நிலைகளில் புகார் மனு அளித்தும், கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டல அலுவலர்கள், வருவாய் துறையுடன் இணைந்து தாவா இடத்தை அளவீடு செய்யாமலும், தீர்ப்புகளில் கட்டிட அனுமதி, சொத்து வரி மற்றும் குடிநீர் ஆகியவற்றை ரத்து செய்ய மாநகராட்சிக்கு எவ்வித உத்திரவும் வழங்கப்படவில்லை என்ற நிலைப்பாடு ஏற்கத்தக்கதல்ல மட்டுமல்லாமல், கண்டிக்கத்தக்கது ஆகும். ஆரம்ப நிலையிலேயே கோயம்புத்தூர் மாநகராட்சியில் தெற்கு மண்டல அலுவலர்கள் இம்மனு மீது உரிய தொடர் நடவடிக்கை எடுத்து இருந்தால், இவ்வாறான புகார் மனுக்களை தவிர்த்திருக்கலாம் என இம்முறைமன்றம் கருதுகிறது. மனுதாரர் குறிப்பிட்டுள்ள வண்டிபாதை புறம்போக்கு இடத்தில் ஆக்கிரமிப்பு எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்பதை வருவாய் துறையினர் நில அளவை உறுதி செய்தால் மட்டுமே அறிய இயலும் என்ற கோவை மண்டலம் இணைப் பதிவுத் துறைத் தலைவர் தன்னுடைய 10.10.2022 நாளிட்ட செயல்முறையில் தெரிவித்தவாறும் கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம், உதவி ஆணையர், உதவி செயற் பொறியாளர் மற்றும் நகர சார் ஆய்வாளர் ஆகியோர் தங்களது வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, திரு. நாராயணசாமி என்பவருக்கு சொந்தமான கட்டடத்துடன் வண்டிப்பாதை இடம் எவ்வளவு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதை வருவாய்த் துறை அலுவலர்களுடன் சேர்த்து மனுதாரரின் முன்னிலையில் இடத்தை அளவீடு செய்து, அவ்வறிக்கையினை இம்முறைமன்றத்திற்கு 15

நாட்களில் அனுப்பிவைக்குமாறு கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும், தாவா இடத்தை அளவீடு செய்தபின் புல வரைப்படத்தில் உரிய குறியீடுகளை, வருவாய் துறையினர் செய்துள்ளனரா என்பதை உறுதி செய்து கொள்ளுமாறும் அதன் நகலை இம்முறைமன்றத்திற்கு அனுப்பி வைக்கவும் கோயம்புத்தூர் தெற்கு மண்டல உதவி ஆணையருக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. வண்டிப்பாதை புறம்போக்கு என்பது உள்ளாட்சிக்குச் சொந்தமானது. எனவே எவ்வித தாமதமின்றி நடவடிக்கை எடுக்க மாநகராட்சி அறிவுறுத்தப்படுகிறது. இதில் ஆக்கிரமிப்பு தொடருமானால் மாநகராட்சிக்கு அந்த அவப்பெயர் தேவையின்றி ஏற்படும் என்றும் எச்சரிக்கப்படுகிறது.

அளவீட்டிற்கு பின்பு, தாவா இடமான வண்டிப்பாதை புறம்போக்கு இடத்தில் கட்டடங்கள் இருப்பின், அவற்றிக்கு கோவை மாநகராட்சியால், கட்டட அனுமதி மற்றும் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டிருந்தால் அவற்றின் மீது சட்டப்பூர்வமான தொடர் நடவடிக்கை எடுக்குமாறு கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 9–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. அ. சிலம்பரசன்,
   த/பெ. ஆ. அர்ச்சுனன் (லேட்),
   43/பி, மதுரை வீரன் கோவில் வீதி,
   இடையர்பாளையம், குனியமுத்தூர்,
   கோயம்புத்தூர் மாவட்டம் - 641 008.
2. ஆணையாளர்
   கோயம்புத்தூர் மாநகராட்சி,
   கோயம்புத்தூர் - 641 001.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.
4. மாவட்ட ஆட்சியர்,
   கோயம்புத்தூர் மாவட்டம்.
5. துணை ஆணையர்,
   தெற்கு மண்டலம், கோயம்புத்தூர் மாநகராட்சி,
   கோயம்புத்தூர் - 641 008.
6. உதவி ஆணையர்,
   தெற்கு மண்டலம், கோயம்புத்தூர் மாநகராட்சி,
   கோயம்புத்தூர் - 641 008.

7. இணை இயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.
8. தாசில்தார்,
   பேரூர் வட்டம்,
   குனியமுத்தூர்,
   கோயம்புத்தூர் மாவட்டம் (மாவட்ட ஆட்சியர் வழியாக)

நகல் :
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.